# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை 19.09.2025 கதிர் 314



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




# கனகராயன்குளம் விபத்தில் ஜேர்மன் பிரஜை பலி!





வவுனியா, செப். 19

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் சைக்கிளுடன் கனரக வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஜேர்மன் பிரஜை ஒருவர் மரணமடைந்துள்ளார்.

கனகராயன்குளம் ஏ - 9 வீதியில் இன்று இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த கனரக வாகனம் வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் அதே திசையில் பயணித்த சைக்கிளுடன்மோதியதில்இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார்.

அவர் ஜேர்மன் நாட்டில் இருந்து வருகை தந்து கனகராயன்குளம் பகுதியில்

7➤

# உள்ளகப் பொறிமுறை மூலமே பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி

## இப்படி பிரதமர் ஹரிணி கூறுகின்றார்



கொழும்பு, செப். 19

"உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலைநாட்டப்படும் என்ற உறுதிமொழியை நிறைவேற்றுவதில் தேசிய மக்கள் சக்தி அரசு பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்றது. இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களினதும் சம உரிமைகள் உறுதிப்படுத்தப்படும் சூழல் உருவாக்கப்படும்." - என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகம்ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பது நாம் வழங்கிய உறுதிமொழிகளில் ஒன்றாகும். எனவே, அது தொடர்பில் எமக்குப் பாரிய பொறுப்பு இருக்கின்றது.

இந்த நாட்டில் நல்லிணக்கம் என்பது மிக முக்கியம். தமது உரிமைகளை அரசு பாதுகாக்கின்றது என அனைத்து இன மக்களும் உணரும் நிலை ஏற்பட வேண்டும். இதற்காக நீதித்துறையின் சுயாதீனம் குறித்து நம்பிக்கை ஏற்பட வேண்டும்." - என்றார்.

7➤

# திலீபனின் 5ஆம் நாள் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப். 19

தியாக தீபம் திலீபனின் 5ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவப் படத்துக்கு மாலை அணி வித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.



# சஷீந்திர ராஜபக்ஷவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, செப். 19

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ வை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம்இன்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

7➤



# மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணம்




கொழும்பு, செப். 19

அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அதிவேக நெடுஞ்சாலையில்

7➤

# 'லங்காதீப' ஊடகவியலாளர் மீது தாக்குதல்!

## சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம்

FMM சுதந்திர ஊடக இயக்கம் Free Media Movement

கொழும்பு, செப். 19

'லங்காதீப' ஊடகத்தின் மொர கொல்லாகம பிரதேச ஊடகவியலாளர் சிசில நந்தன கெலேகம மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்துக்குச் சுதந்திர ஊடக இயக்கம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான மொரகொல் லாகம பிரதேச ஊடகவியலாளர் சிசில நந்தன கெலேகம,

7➤

# 16,000 பட்டதாரிகளின் மனித உரிமைகளை மீறியுள்ள அரசாங்கம்! – தயாசிறி எம்.பி குற்றச்சாட்டு



கொழும்பு, செப் .19

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட்டாலும் 5 ஆண்டுகளில் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றிய 16 000 பட்டதாரிகளின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பு -புறக்கோட்டை புகையிரத நிலைய வளாகத்தில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை நேற்று சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இந்த பட்டதாரிகளுடன் வழக்கு தாக்கல் செய்து சட்டத்தரணி என்ற ரீதியில் அவர்களுக்காக நீதிமன்றம் சென்றிருக்கின்றேன். அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்தவின் காலத்தில் சில பிரச்சினைக்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

அதற்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட்ட பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான வயதெல்லை 25 இலிருந்து 45ஆக அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

அதற்கமைய நீதிமன்றமும் 45 வயது வரை நியமனத்தை வழங்குமாறு தீர்ப்பளித்தது. இந்த பட்டதாரிகளில் பெருமளவானோர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட்டாலும் பாடசாலைகளில் பாட நேரங்கள் வழங்கப்பட்டு சுமார் 5 ஆண்டுகளுக்கும் மேலாக கற்பித்தலில் ஈடுபட்டவர்களாகவுள்ளனர்.

இவர்கள் கற்பித்த மாணவர்கள் இன்று ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர். ஆனால் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. இது உண்மையில் மனித உரிமை மீறலாகும்.

கல்வி அமைச்சும் இவர்களுடன் எந்தவொரு பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுக்கவில்லை. எனவே தான் இன்று இரு வாரங்களாக இவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசாங்கமே இவர்களை இந்த நிலைமைக்கு தள்ளியுள்ளது. இந்த பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் சத்தியாக்கிரகம் அடுத்த கட்டத்துக்குச் செல்லும் என்றார். (ஐ)

# இன்று இடியுடன் கூடிய மழை

கொழும்பு, செப் .19

மேல், சப்ரகமுவ, மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளி மண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் பிற்பகல் 1.00 மணிக்குப் பிறகு அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்ய தீர்மானம்!

ஐந்து வருடம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியில் புதிய அஞ்சல் காரியாலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில், கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

முன்னைய காலத்தைப் போன்று பாதுகாப்பு படையணி இல்லாமல், வாகன பேரணி இல்லாமல் அமைச்சர்கள் சாதாரணமாக வந்து செல்கின்றார்கள்.

கடந்த 30 வருடங்களாக அரச சொத்துக்களையும், இடங்களையும், அனுபவித்து வந்த தலைவர்கள், தற்போதே அவர்களுடைய சொந்த வீடுகளுக்கு சென்றுக் கொண்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

ஐந்து வருடம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் அவர்களுக்கு கிடைக்கின்ற ஓய்வூதியம் இரத்து செய்யப்படும்.

அது தொடர்பில் நீதிமன்றத்திலும் அனுமதி எடுத்து இருக்கின்றோம். விரைவில் அதற்குரிய சட்டமூலம் வர இருக்கிறது.

இதேவேளை, பொருளாதாரம் வீழ்ச்சி அடையும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், எதிர்க்கட்சியினரும் கூறி வருகின்றனர்.

எனினும், அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக பொருளாதாரம் வளர்ச்சி அடைந்திருப்பதை தாம் மக்களுக்கு காட்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# ஜனாதிபதியின் தலைமையில் "Disrupt Asia 2025" பிரதான மாநாடு



கொழும்பு, செப் .19

இலங்கையில் முன்னணி புதிய தொழில்முனைவோர் மாநாடு மற்றும் புத்தாக்க விழாவான "னுளைசரிவ யுளயை 2025" பிரதான மாநாடு நேற்று (18) கொழும்பில் உள்ள சினமன் லைஃப் ஹோட்டலில் நடைபெற்றது. இதன் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சுமார் 20 நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் பங்கேற்கும் னுளைசரிவ யுளயை 2025, நேற்று (17) ஆரம்பமானதோடு செப்டம்பர் 20 வரை நடைபெறும்.

சர்வதேச கவனத்தை ஈர்ப்பதன் மூலம் தெற்காசியாவில் வளர்ந்து வரும் புத்தாக்க மையமாக இலங்கையை நிலைநிறுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும். புதிய தொழில்முனைவு மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதன் மூலம் டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு இது சிறந்த பக்கபலமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று நடைபெற்ற பிரதான மாநாட்டின் ஆரம்ப அமர்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி, புதிய தொழில்முனைவோர் கண்காட்சியையும் பார்வையிட்டார்.

நிகழ்வில் உரையாற்றிய டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்ன, நாட்டிற்கான மேம்பாட்டு கருவியாக புத்தாக்கத்தைப் பயன்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்று தெரிவித்தார். "னுளைசரிவ யுளயை 2025" என்பது நாட்டில் இளைஞர் சமூகத்தை மேம்படுத்துவதற்கும், உலகளாவிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும், டிஜிட்டல் பொருளாதார மாற்றத்தை விரைவுபடுத்துவதற்கும் சிறந்த பக்கபலம் என்று பிரதி அமைச்சர் கூறினார். இந்தத் திட்டம் நாட்டில் திறமையான தொழில்முனைவோருக்கும் உலகளாவிய சந்தை வாய்ப்புகளுக்கும் இடையே ஒரு பாலத்தை உருவாக்கும் என்றும் தெற்காசியாவில் புத்தாக்கத்திற்கான நுழைவாயிலாக இலங்கையை நிலைநிறுத்தும் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இங்கு பிரதான உரை நிகழ்த்திய கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய, இலங்கையின் டிஜிட்டல்மயமாக்கலின் நோக்கங்களையும், அடுத்த நான்கு ஆண்டுகளில் 15 பில்லியன் டொலர் டிஜிட்டல் பொருளாதாரத்தை அடைவதற்கான திட்டங்களையும் விளக்கினார். டிஜிட்டல் ஏற்றுமதிகளை மூன்று மடங்காக அதிகரித்தல், டிஜிட்டல் திறமை எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல் மற்றும் இலங்கையை உலகளாவிய டிஜிட்டல் தரநிலைகளில் முன்னணிக்குக் கொண்டுவருதல் ஆகியவற்றின் இலக்குகளை அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் புதிய தொழில்முனைவு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகள் குறைவான முதலீட்டுத் துறைகளாகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், இந்த பெறுமதியான முதலீட்டு வாய்ப்பைத் தவறவிடக்கூடாது என்று உள்ளூர் மற்றும் உலகளாவிய பங்காளர்களை வலியுறுத்தினார். டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு 15 பில்லியன் டொலர் வாய்ப்பு உள்ளது என்றும், அதை யார் பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதே அதைவிட முக்கியமான விடயம் என்றும் அவர் மேலும் கூறினார். இப்போது முதலீடு செய்து இந்த மாற்றத்தில் பங்காளிகளாக மாறுபவர்கள் நாளைய வெற்றியாளர்களாக இருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் முதலீட்டுக்கு உகந்த சூழல், வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கான பாதுகாப்பான சூழல் மற்றும் அரசாங்கத்தின் டிஜிட்டல் கட்டமைப்புகளை தனியார் துறைக்குத் திறக்க அனுமதிக்கும் புதிய கொள்கைகள் குறித்தும் அவர் இங்கு எடுத்துரைத்தார்.

Paytm ,d; ஸ்தாபகர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜய் சேகர் சர்மா மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் குறித்த ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகரும் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவருமான கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய உள்ளிட்ட உலகளாவிய நிபுணர்களுடனான கலந்துரையாடலும் நடத்தப்பட்டது. (ஐ)



## எமது ஆட்சியில் நியாயம் வழங்கப்படும்! – மின்சார சபை ஊழியர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி உறுதி

கொழும்பு, செப் .19

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள சுயவிருப்பில் சேவையிலிருந்து விலகுவதற்கான தெரிவிற்கு இணங்க வேண்டாம் என்று மின்சார சபை ஊழியர்களைக் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மின்சாரசபையிலுள்ள பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தலையிட்டு தீர்வினை வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதியின் உரையிலிருந்து அந்த எதிர்பார்ப்பும் பிரயோசனமற்றது என்பது தெளிவாகியுள்ளது.

பொது மக்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தலைவராக ஜனாதிபதி பொறுப்புடன் பேசியிருக்க வேண்டும். மாறாக நிறைவேற்றிகாரத்தின் உச்சத்திலுள்ள அவர் மின்சாரசபை ஊழியர்களை மறுசீரமைப்பினை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால் சேவையிலிருந்து விலகிக் கொள்ளுமாறு கூறுகின்றார்.

ஊழியர்களுடன் எந்தவொரு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்காது, அவர்களுடன் கலந்தாலோசிக்காது மறுசீரமைப்பினை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடந்த அரசாங்கத்தில் மின்சாரசபை மறுசீரமைப்பிற்கான சட்ட மூலம் முன்வைக்கப்பட்டது.

அந்த சட்ட மூலத்தை இரத்து செய்து பிரஜைகளின் உரிமைகளைப்பாதுகாப்பதற்கான சட்டம்நடைமுறைப்படுத்தப்படும் என தேர்தல் காலத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகராவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதே சட்டத்தையே வரையறுக்கப்பட்ட சில திருத்தங்களுடன் இந்த அரசாங்கமும் சமர்ப்பித்திருக்கிறது.

எவ்வாறிருப்பினும் இந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம் என்றும், அரசாங்கம் பரிந்துரைத்துள்ள சேவையிலிருந்து விலகுவதற்கான தெரிவுக்கு இணங்க வேண்டாம் என்றும் மின்சாரசபை ஊழியர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

காரணம் இந்த அரசாங்கம் நிரந்தரமானதல்ல. எனவே இந்த அரசாங்கத்தின் கீழ் உங்களுக்கு ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டால், எமது ஆட்சியில் அவை நிவர்த்தி செய்யப்படும் என்று உறுதியளிக்கின்றோம். என தெரிவித்துள்ளார். (ஐ)

## முல்லையில் தமிழர்களின் விவசாய நடவடிக்கைக்கு இடையுறு தடைகளை உடைத்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் - ரவிகரன் எம்.பி!



முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ்மக்கள் தமது பூர்வீக மானாவாரி விவசாய நிலங்களில் பெரும்போக நெற்செய்கைக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடும்போது வனவளத்திணைக்களம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த எல்லைக்கிராம மக்களின் விவசாய நடவடிக்கைக்கு இடையூறுகள் ஏற்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தொடர்ந்தும் தடைகள் ஏற்படுத்தப்பட்டால் தடைகளை உடைத்தெறிந்து விவசாய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

மக்களின் அழைப்பையேற்று குறித்த பகுதிக்குநேரடியாகச் சென்று நிலமைகளை ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசெயலகப்பிரிவிற்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக எல்லைக்கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய கிராமங்களைச்சேர்ந்த தமிழ்மக்கள் கடந்த 1984 ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களிலிருந்து இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறாக குறித்த எல்லைக்கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்களை அவர்களுடைய பூர்வீக வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றிவிட்டு, உடனடியாக அப்பகுதித் தமிழ்மக்கள் பயன்படுத்திவந்த நீர்ப்பாசனக்குளங்கள் மற்றும் குறித்த குளங்களின் கீழான விவசாயநிலங்கள் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் பெரும்பான்மையினத்தவர்களால் அபகரிக்கப்பட்டிருந்த தமது பூர்வீக விவசாயக் குளங்களையும், அவற்றின்கீழான வயல்நிலங்களையும் விடுவிக்குமாறு கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், கருநாட்டுக்கேணி தமிழ்மக்கள் மற்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோரால் தொடர்ந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோதும் குறித்த காணிகள் விடுவிக்கப்படவில்லை.

குறித்த நீர்ப்பாசனக்குளங்களின் கீழான வயல்நிலங்கள் பலவற்றுக்கு தமிழ் மக்களிடம் ஆவணங்களும் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் குறித்த நீர்ப்பாசன வயல்காணிகளை ஆக்கிரமித்துள்ள பெரும்பான்மை இனத்தவர்களுக்கு கடந்த 2013ஆம் ஆண்டுகாலப்பகுதியில் அப்போதைய அரசால் மகாவலி அதிகாரசபையின் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக தமது பூர்வீக நீர்ப்பாசனக்குளங்களையும், அவற்றின் கீழான நீர்ப்பாசன வயல் நிலங்களையும் இழந்துள்ள குறித்த கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணிப்பகுதி எல்லைக்கிராமத் தமிழ் மக்கள் மானாவாரி நிலங்களிலேயே தற்போது தமது நெற்செய்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இத்தகையசூழலில் குறித்த மானாவாரி விவசாய நிலங்களில் தமிழ்மக்கள் நெற்செய்கை மேற்கொள்ளும்போது வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை என்பன தொடர்ச்சியாக இடையூறுகளை ஏற்படுத்திவருகின்றன என்பது தொடர்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு முறைப்பாடளித்தனர்.

அதன்பின்னர் குறித்த பகுதிக்கு சென்று பார்வையிட்டு கருத்துத் தெரிவிக்கையில், எமது மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறகேளை ஏற்படுத்துவது பொருத்தமான விடயமில்லை. இவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்தினால் இந்தமக்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்படும். எனவே எமது மக்களின்வாழ்வாதாரத்தை பாதிக்கின்றவகையில் செயற்படும் திணைக்களங்களின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தொடர்ந்தும் எமது மக்களுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டால் அந்த தடைகளை உடைத்து எமது மக்கள் நெற்செய்கை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (ஐ)

# கிண்டியில் சுதந்திர போராட்ட வீராங்கனை வேலுநாச்சியார் சிலையை திறந்து வைத்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



சென்னை கிண்டியில் சுதந்திர போராட்ட வீராங்கனை வேலுநாச்சியார் சிலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். வீரமங்கை இராணி வேலுநாச்சியார் . மன்னர் செல்லமுத்து விஜயரகுநாத சேதுபதி -முத்தாத்தாள் நாச்சியார் தம்பதியரின் மகளாக 1730 ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதிலே வாள் வீச்சு, அம்பு விடுதல், ஈட்டி எறிதல், குதிரையேற்றம். யானையேற்றம் உள்ளிட்ட போர்க்கலைகளைக் கற்றார். 1746ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்தார்.

அதனால், சிவகங்கை சமஸ்தானத்தின் இராணியானார். 1772 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் சிவகங்கையின் மீது போர் தொடுத்தனர். காளையார்கோவில் போரில் மன்னர் முத்துவடுகநாதர் கடுமையாகப் போர் புரிந்தபோதும் சூழ்ச்சி காரணமாக வீர மரணமடைந்தார்.

அந்நிலையில், வீரமங்கை வேலுநாச்சியார். சிவகங்கையை விட்டு வெளியேறி, காடுகள் வழியே திண்டுக்கல்லை அடைந்தார். அங்கு கோபால் நாயக்கர் உதவியுடன் ஹைதர் அலி, திப்பு சுல்தான், ஆகியோர் உதவியையும் பெற்று ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட முடிவு செய்தார்.

ஹைதர்அலிவேலுநாச்சியாரின்போர்த்திறனைப்பாராட்டி ஆயுதங்களையும், படை வீரர்களையும் வழங்கினார். இழந்த சிவகங்கையை மீண்டும் கைப்பற்ற வேண்டும் என்ற வைராக்கியத்துடன், சிவகங்கையை நோக்கி படை நடத்திச் சென்று, ஆவேசத்துடன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்டார்.

வீரமங்கை வேலுநாச்சியாரின் மகளிர் படைத்தளப தியாகத் திகழ்ந்தவர் குயிலித்தாய். அவர் அப்போரில் ஆங்கிலேயரை அழிப்பதில்,வேலுநாச்சியாருக்குப் பெருந்துணையாக நின்று உடம்பில் தீ வைத்துக் கொண்டு வெள்ளையர்களின் ஆயுதங்கிடங்கில் குதித்து அவர்களின் ஆயுதங்களை அழித்தார். அதனால், அஞ்சி ஓடிய வெள்ளையரை விரட்டி சிவகங்கை அரியணையை மீண்டும் கைப்பற்றினார் வீராங்கனை வேலுநாச்சியார். அதன்பின், 16 ஆண்டுகள் சிவகங்கைச் சீமையைச் சிறப்பாக ஆட்சி செய்தார். மக்கள் நலனுக்காக நிலம், வரி, வேளாண்மை, கல்வி, பெண்கள் பாதுகாப்பு உள்ளிட்ட சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார்.

பின்னர். தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருக்கு ஆட்சியை வழங்கி அவருக்குத் துணை புரிந்தார். வட இந்தியாவில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் புரிந்த வீராங்கனை ஜான்சி ராணி வாழ்ந்த (கி.பி. 1835-1858) காலத்திற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே, ஆங்கிலேயர்களை எதிர்த்த “முதல் இந்திய விடுதலைப் பெண் போராளி “ வீரமங்கை வேலுநாச்சியார் அவர்கள் 1796 டிசம்பர் 25 அன்று மறைந்து அழியாப் புகழ் பெற்றார்.

இந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுரைப்படி, தமிழ் மண்ணின் தலைசிறந்த வீராங்கனை வேலுநாச்சியார் வீரத்தினை வருங்காலத் தலைமுறையினர் அறிந்து போற்றிடும் வகையில், சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் வேலுநாச்சியார் திருவுருவச் சிலை நிறுவப்படும் என 2024 - 2025 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் வகையில், இன்று காலை 10.00 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 50 லட்சம் செலவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையினை முதலமைச்சர் 19.9.2025 இன்று திறந்து வைத்துச் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் பெருமக்கள், மேயர். நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்நாடு அரசின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஐ)

## பாலஸ்தீன மக்கள் இனப்படுகொலையை தடுத்து நிறுத்த இந்திய அரசு முன்வர வேண்டும்: வைகோ வலியுறுத்தல்!



பாலஸ்தீன மக்கள் இனப்படுகொலையை தடுத்து நிறுத்த இந்திய அரசு முன்வர வேண்டும் என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இரண்டு ஆண்டுகளாக காசா மீது இன அழிப்புப் போரை நடத்திக் கொண்டிருக்கும் யூத இனவெறி இஸ்ரேல், ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்களை கொன்றுள்ளது. மறுபுறம், காசாவிற்குள் உணவுப் பொருட்களை அனுமதிக்காமல் பட்டினிப் போரை தொடுத்து வருவதாலும் ஊட்டச் சத்துக் குறைபாட்டாலும், பசியாலும் ஆயிரக்கணக்கான குழந்தைகளும் செத்து மடிந்துள்ளனர்.

ஆகஸ்ட் 8-ஆம் தேதியன்று காசா நகரத்தை முழுவதுமாக கைப்பற்றும் திட்டத்திற்கு இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்தது. இதற்கு பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. ஆனால், அவற்றையெல்லாம் மீறி காசா மீது தீவிர தாக்குதலை நடத்திய இஸ்ரேலுக்கு அந்நாட்டு மக்களே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஆகஸ்ட் 20-ஆம் தேதியன்று காசா நகரம் முழுவதையும் இஸ்ரேலின் கட்டுப்பட்டின் கீழ் கொண்டுவரும் திட்டத்தை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சகம் உறுதிப்படுத்தியது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் காட்ஸ், காசா நகரை கைப்பற்றும் திட்டத்திற்காக மேலும் 60,000 ரிசர்வ் படைகளை காசாவிற்குள் அனுப்புகின்ற திட்டத்தையும் அங்கீகரித்தார். இதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் 21-ஆம் தேதியன்று மக்கள் நெருக்கமாக உள்ள காசா நகரத்தின் சைதூன; (\;aidbbn) மற்றும் ஜபாலியா (Janalia) பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவம் தரைவழி தாக்குதலை தீவீரப்படுத்தியது. ஏற்கெனவே, காசாவில் இருந்த 19 இலட்சம் மக்களை வெளியேற்றி விட்டு காசாவின் 90 சதவிகிதப் பகுதியை இஸ்ரேல் இராணுவம் கைப்பற்றியுள்ளது.

சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஜெர்மனியில் பாசிச ஹிட்லர் யூதர்களை வதை முகாம்களில் அடைத்துப் படுகொலை செய்ததைப் போன்று, தற்போது பாசிஸ்ட் நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அரசு காசாவின் பாலஸ்தீன மக்களை முகாம்களில் அடைத்து படுகொலை செய்ய திட்டமிட்டுள்ளது. அதற்காக காசா நகரத்தின் மீது தாக்குதல் நடத்தி, காசாவை திறந்தவெளி வதைமுகமாக மாற்றிக் கொண்டிருக்கிறது.

ஹமாஸ் இயக்கத்தை அழிப்பதுதான் தன்னுடைய நோக்கம் என்று அறிவித்துக்கொண்டு காசா மீதான போரைத் தொடங்கிய இஸ்ரேல் அரசு, தற்போது காசாவை முழுமையாக கைப்பற்றுவதுதான் தன்னுடைய நோக்கம் என்று வெளிப்படையாக அறிவித்துள்ளது.

“போர் நிறுத்தத்திற்கு தயார்” என்று ஹமாஸ் பலமுறை தெரிவித்துவிட்டப் போதிலும், அதன் நியாயமான கோரிக்கைகளுக்கு உடன்படாமல், நெதன்யாகு தலைமையிலான இஸ்ரேல் அரசு போரைத் தொடர்ந்துக் கொண்டிருக்கிறது. காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ளது. செப்டம்பர் 16ஆம் தேதி தொடங்கிய தரைவழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்துகிறது.

இஸ்ரேலிய தாக்குதல்களில் காசாவில் உயிரிழந்த பாலஸ்தீனியர்கள் எண்ணிக்கை 65 ஆயிரத்தைக் கடந்துள்ளது. காசா சுகாதார அமைச்சகத்தின் தகவலின்படி, அக்டோபர் 7, 2023 முதல் இதுவரை 65,062 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 165,697 பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த சில நாட்களில் இஸ்ரேலிய விமானப்படை மற்றும் பீரங்கிப் படை 150-க்கும் மேற்பட்ட முறை காசா நகரை தாக்கியுள்ளதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது. இந்தத் தாக்குதல்கள், ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் தஞ்சம் அடைந்துள்ள கூடார முகாம்களுக்கு அருகில் உள்ள உயரமான கட்டிடங்களை தரைமட்டமாக்கியுள்ளன.

இலங்கையின் முள்ளிவாய்க்காலில் இலட்சக்கணக்கான ஈழத்தமிழ் மக்களை சிங்கள இனவெறி அரசு இனப்படுகொலை செய்ததைப் போல, பாலஸ்தீனத்தின் காசா பகுதியிலுள்ள இலட்சக்கணக்கான மக்களை யூத இனவெறி இஸ்ரேல் அரசு நம் கண் முன்னே இனப்படுகொலை செய்து கொண்டிருக்கிறது.

ஈழத் தமிழர்கள் சிங்கள இனவெறி அரசால் இலட்சக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்ட பொழுது உலக நாடுகளும், ஐ.நா. மன்றமும் கையறு நிலையில் வேடிக்கை பார்த்தன. அதே போன்று இன்றைக்கு பாலஸ்தீனத்தில் இனப்படுகொலை நடந்து வருகிறது.

பாலஸ்தீனத்தின் அப்பாவி மக்கள் படுகொலையை இந்திய அரசு வேடிக்கை பார்க்க கூடாது. காசா மீதானப் போரை நிறுத்துவதற்கு உலக நாடுகளோடு இணைந்து இந்தியா முன் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## வேலையில்லாத பட்டதாரிகளுக்கு பீகாரில் மாதம் ரூ.1,000 நிதிஉதவி: முதல்வர் நிதிஷ்குமார் அறிவிப்பு



பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆட்சியை தக்கவைக்க முதல்வர் நிதிஷ்குமார் தற்போது பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து வருகிறார். அந்தவகையில் வேலையில்லாத இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சுய உதவித் திட்டத்தின் பலன், இப்போது கலை, அறிவியல் மற்றும் வணிகப் பிரிவைச் சேர்ந்த வேலையில்லாத ஆண் மற்றும் பெண் பட்டதாரி இளைஞர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், 20 முதல் 25 வயதுக்குட்பட்ட வேலையில்லா பட்டதாரி இளைஞர்களுக்கு அதிகபட்சமாக 2 ஆண்டுகளுக்கு மாதம் ரூ.1,000 உதவித் தொகையாக வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ஐ)

## மழையால் பாதிக்கப்பட்ட மக்களை பார்க்க சென்ற பாஜ எம்பி கங்கனா ரணாவத்துக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்:

உத்தரபிரதேசம், இமாச்சலபிரதேசம், உத்தரகாண்ட், பஞ்சாப் உள்பட வடமாநிலங்களில் கடந்த சில தினங்களாக மேக வெடிப்பு காரணமாக தொடர் கனமழை பெய்து வருகிறது. இதனால் அந்த மாநிலங்கள் வெள்ளத்தில் தத்தளிக்கின்றன. மேலும், இமாச்சலபிரதேசம், பஞ்சாப் மாநிலங்களில் நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி ஏராளமானோர் உயிரிழந்து விட்டனர். இமாச்சலில் உள்ள குலு மற்றும் மணாலியில் கனமழையால் பல இடங்களில் நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளம் ஏற்பட்டது.

இதில் அங்கிருந்த வீடுகள் சேதமடைந்தன. அங்குள்ள கடைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. இந்நிலையில் பாஜ எம்.பி கங்கனா ரணாவத் மற்றும் பாஜ தலைவர்கள் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களை பார்க்க சென்றனர். அப்போது, பாதிக்கப்பட்ட மக்களை பார்க்க தாமதமாக சென்ற கங்கனா ரணாவத்துக்கு எதிராக உள்ளூர் மக்கள் கருப்பு கொடி ஏந்தியவாறு, திரும்பி போ, திரும்பி போ என கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# பல நூற்றாண்டு துயரம்!

வேலைஎன்பது அனைவருக்கும்பொதுவானதுதானே? ஆனால் அந்த ஒரே வேலைக்கு ஆண் செல்வதும் பெண் செல்வதும் ஒரே மாதிரியான சூழலில் அமைவதில்லை.

'சமைத்துவிட்டு செல்வதற்கும் சாப்பிட்டுவிட்டு செல்வதற்கும் இடைப்பட்ட இடைவெளி, வரவேற்பறைக்கும் அடுக்களைக்கும் இடையேயான தூரம்'. இந்தத் தூரம் பார்வைக்கு சில அடிகளே இருப்பதுபோல் தோன்றினாலும் இது பல நூற்றாண்டுத் தூரம். பிறகொரு சூழலில் இதுகுறித்து விரிவாகப் பேசுவோம்.

ஆண் வேலை முடிந்து தாமதமாக வருவது, கடமை உணர்வு உள்ளவராகவும் பொறுப்புள்ளவராகவும் பார்க்கப்படுகிறது. அதேநேரம் பெண் பணி முடிந்து தாமதமாக வருவது, அவர் குடும்பப் பொறுப்பு அற்றவர் போலவும் வீட்டைக் கவனிக்காதவர் போன்றப் பார்வையையும் ஏற்படுத்துகிறது.

பணியிடத்துக்குப் பெண் உரிய நேரத்துக்கு வரும்போது, ' வீட்டில் வேறு யாராவது சமைப்பார்கள் போல', 'சமைக்க ஆள் வைத்திருப்பார்கள் ' போன்ற அங்கலாய்ப்புக் குரல்களை எதிர்கொள்ள வேண்டி உள்ளது.

வேலையில் சமரசம் செய்துகொள்ளாத பெண்களை அவர்களின் குடும்ப வாழ்க்கையைக் கேலியாக்கிப் பேசுவது, பரவலாக வழக்கத்தில் உள்ளது. 'இங்கேயே இவ்வளவு மிரட்டுறீங்க. வீட்டில அவர் பாவம்!' போன்ற சொற்களைக் கடக்காத நிமிர்நடைப் பெண்கள் அரிது.

பணியிடத்தில் ஒரு பெண் தன் பணியைச் சிறப்பாகப் பணிசெய்துவிட்டால், 'அப்பா என்ன செய்கிறார்?', 'கணவர் என்ன செய்கிறார்?' என்கிற கேள்விகள் பின்னொட்டாக வந்துநிற்கின்றன. எந்த ஒரு பெண்ணின் பணியிலும் அவரது அப்பாவோ இணையரோ வந்து பணி செய்வதில்லை. குடும்பத்தின் உதவியும் ஒத்துழைப்பும் இல்லாமல் ஆணோ பெண்ணோ யாராக இருப்பினும் வெற்றி பெற முடியாது என்பது உண்மை.





ஆணின்வெற்றிக்கான பாராட்டு முழுக்க முழுக்க அவருக்கும் பெண்ணின் வெற்றிக்கான பாராட்டு அவரது கணவன் மற்றும் குடும்பத்தினருக்குப் பகிர்ந்து அளிக்கப்படுவதன் காரணம்தான் என்ன?

இதுஒருபுறமிருக்க, உண்மையில் பெண்கள் எந்த முடிவையும் சுயமாக எடுக்கிற சூழல் குடும்பத்தில் இருப்பதில்லை. பக்கத்துத் தெருவுக்கோ கடைவீதிக்கோ செல்லவும்கூட வெளிநாட்டிலோ வெளியூரிலோ வேலைசெய்கிற தம் கணவர்களிடம் முன்அனுமதி பெறவேண்டி உள்ளது. அவசரமாகக் கிளம்ப வேண்டிய சூழல் வந்தாலும் கிளம்பியதும் தவறாமல் அங்கே தகவல் சொல்லியே ஆகவேண்டும் என்பது எழுதப்படாத விதிகளுள் ஒன்று. ஏதோ அவசரத்தில் சொல்ல மறந்துவிட்டாலோ சென்று வந்தபிறகு சொன்னாலோ, அடுத்த இரண்டு நாள்களுக்குக் குடும்பத்தில் அமைதி இருக்காது. இப்பெண் குடும்ப பாரத்தையும் தாங்கிக்கொண்டு அதைத் தவறாமல் அவருக்குத் தகவலும் சொல்லி, ஒவ்வொன்றாகச் செய்வதற்குள் இரட்டைவாழ்வு வாழ்ந்த சுமையாகவேத் தோன்றும்.





வெளியூர், வெளிநாடு பணிச்சூழல் இப்படியிருக்க, ஒரே ஊரில் பணிசெய்பவர்கள் எனில், மனைவியின் ஏ.டி.எம் கார்ட் கணவனிடமே இருக்கும். ஏ.டி.எம் மெஷினில் பணம் எடுக்கக்கூட அந்த வீட்டு ஆண்களையே பெண்கள் எதிர்பார்க்க வேண்டியுள்ளது.

ஜிபே உள்ளிட்ட இணையப் பணப் பரிவர்த்தனைகள் அல்லாமல் வங்கி, ஏ.டி.எம் போன்ற இடங்களுக்குச் செல்ல ஏனோ இன்னும் சில பெண்களுக்குத் தயக்கம் இருக்கிறது. ஆண்கள் உங்கள் இணையர், மகள், சகோதரிக்கு இதுபோன்ற பொது இடங்களுக்குச் சென்று வருவதற்குப் பழக்கப்படுத்துங்கள்.

ஆண்களுக்கு டீக்கடை வாசல்போல பெண்களுக்கு எவ்வித இளைப்பாறலும் இல்லை. கேட்பதற்கு மிகைப்படுத்துதல் போன்று இருந்தாலும், இன்னமும் டீக்கடை வாசலில் ஒரு தேநீர் பருகுவது, பல பெண்களுக்கும் பெரும் ஏக்கமாகவே உள்ளது.

பணிமுடிந்து மாலை வீடு செல்லும்முன் ஆண்கள் டீக்கடையில் கூடுவது மிக இயல்பானதாக பார்க்கப்படுகிறது. அதே பணி முடிந்த பத்தாவது நிமிடத்தில் பெண் வீட்டுக்குக் கிளம்பியிருக்க வேண்டும். இந்த டீக்கடை இளைப்பாறல், அவளுக்கு எட்டாக் கனி.

பல நேரங்களில் 'எங்க போறீங்க?' என்ற கேள்வியே ஆண்களுக்கு எரிச்சலாக இருக்கிறது. ஆனால் பெண்கள் கிளம்புவதைச் சொல்லிவிட்டுச் சென்றாலும், எங்கே இருக்கிறோம் என்பதை மணிக்கொருமுறை அப்டேட் செய்துகொண்டே இருக்க வேண்டும். இதுவே ஆண்களுக்கு அப்படியில்லை.

இங்கே சமத்துவம் என்கிற பெயரில் எல்லாவற்றிலும் ஒரேவிதமான உரிமைப்போரை யாரும்நிகழ்த்துவதில்லை. 'இதெல்லாம் பெரிய விஷயமா?' என ஆண் மனம் நினைக்கிற பலவும், உண்மையில் பெண்களுக்குப் பெரிய விஷயமாக இருப்பவையே. (7ஆம் பக்கம் பார்க்க..)

# ரஷ்யாவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது



ரஷ்யாவின் கம்சத்கா பகுதியில் ஏற்பட்ட மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.8ஆக பதிவானது. கம்சத்கா பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காம்சட்கா தீபகற்பத்தின் தலைநகரான பெட்ரோபாவ்லோவ்ஸ்க்-காம்சாட்ஸ்கிக்கு கிழக்கே 128 கிலோமீட்டர் (80 மைல்) தொலைவில், 10 கிலோமீட்டர் (ஆறு மைல்) ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம; (USGS) தெரிவித்துள்ளது.இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.4 ஆக பதிவாகியுள்ளது.

மேலும் அருகிலுள்ள கடலோரப் பகுதிகளில் ஆபத்தான அலைகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக அமெரிக்க பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது. இன்று அதிகாலை 2.30 மணி சமயத்தில் நிலநடுக்கம் ஏற்பட்ட நிலையில், இனி கூடுதல் நிலநடுக்கங்கள் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. தீபகற்பத்தின் கிழக்கு கடற்கரைக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது என்று அரசு சார்பாக அறிவுறுத்தப்பட்ள்ளது. (ஐ)

## இருநாடுகளும் கூட்டு ஒப்பந்தம் பாகிஸ்தானை தாக்கினால் சவுதியை தாக்கியதற்கு சமம்



கத்தாரில் உள்ள ஹமாஸ் தலைமை அலுவலகம் மீது இஸ்ரேல் புகுந்து தாக்குதல் நடத்தியதை அடுத்து இஸ்லாமிய நாடுகள்தனித் தனியாக ஆலோசனை நடத்தி வருகின்றன. அதன் ஒரு கட்டமாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், சவுதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் ஆகியோர் சந்தித்து ஆலோசனை நடத்தினார்கள். இந்த ஆலோசனை சவுதியில் நடந்தது.


அப்போது இரு நாடுகளின் மீதான எந்தவொரு தாக்குதலும் இருவருக்கும் எதிரான ஆக்கிரமிப்பாக கருதப்படும் என்று முக்கிய கூட்டு ஒப்பந்தத்தில் இருநாட்டு தலைவர்களும் கையெழுத்திட்டனர். இதை பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் என்று அறிவித்து உள்ளனர். அதில்,'எந்தவொரு நாட்டிற்கும் எதிரான எந்தவொரு ஆக்கிரமிப்பும் இருவருக்கு எதிரான ஆக்கிரமிப்பாகக் கருதப்படும்'என்று கூறப்பட்டுள்ளது.

1982 ஆம்ஆண்டு முதல்சவுதியும், பாகிஸ்தானும் நெருக்கமாக உள்ளன. பண நெருக்கடியால் தவித்த பாகிஸ்தானுக்கு அதிக அளவு நிதியை சவுதி வழங்கி உள்ளது. அதே போல் இந்தியாவுடனும் சவுதி நெருக்கமாக உள்ளது.

இந்த புதிய ஒப்பந்தம் மூலம் இந்தியா, சவுதி உறவு பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் குறித்து கவலை தெரிவித்த மூத்த அமெரிக்க தூதர் சல்மே கலீல்சாத்,' இது பல கேள்விகளை எழுப்புகிறது.

இந்த ஒப்பந்தத்தில் ரகசிய இணைப்புகள் உள்ளதா, அப்படியானால், அவை என்ன சொல்கின்றன? இந்த ஒப்பந்தம் சவுதி அரேபியா மற்றும் அமெரிக்க இடையிலான பாதுகாப்பில் நம்பிக்கை குறைந்து வருவதற்கான அறிகுறியா? பாகிஸ்தானிடம் இஸ்ரேல் உட்பட மத்திய கிழக்கு முழுவதும் உள்ள இலக்குகளைத் தாக்கக்கூடிய அணு ஆயுதங்கள் மற்றும் விநியோக அமைப்புகள் உள்ளன. அமெரிக்காவில் உள்ள இலக்குகளை அடையக்கூடிய அமைப்புகளையும் அது உருவாக்கி வருகிறது' என்றார். (ஐ)

## அமெரிக்காவின் வரி அச்சுறுத்தல்கள் பலனளிக்காது: ரஷ்யா திட்டவட்டம்



இந்தியா மற்றும் சீனாவுக்கு எதிராக அதிக வரி விதிக்கும் அமெரிக்காவின் அச்சுறுத்தல்கள் பலனளிக்காது என்பது நிரூபணம் ஆகி வருகிறது என ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் தெரிவித்தார்.

இது தொடர்பாக, ரஷ்ய ஊடகத்திற்கு செர்ஜி லாவ்ரோவ் அளித்த பேட்டி: சீனாவும், இந்தியாவும் பண்டைய நாகரிகங்கள் கொண்ட நாடுகள். எனக்கு பிடிக்காததை செய்வதை நீங்கள் நிறுத்துங்கள் அல்லது நான் உங்கள் மீது வரிகளை விதிப்பேன் என்று அவர்களிடம் பேசுவதில் எந்த பயனும் இல்லை. இந்தியா மற்றும் சீனாவுக்கு எதிராக அதிக வரி விதிக்கும் அமெரிக்காவின் அச்சுறுத்தல்கள் பலனளிக்காது என்பது நிரூபணம் ஆகி வருகிறது.

முதல் ஆளாக பிரதமர் மோடிக்கு வாழ்த்து சொன்ன அமெரிக்க அதிபர்

இந்தியாவும், சீனாவும் அமெரிக்காவின் கோரிக்கைகளை எதிர்த்து வருகிறது. அமெரிக்காவின் அழுத்தத்தை விட தங்கள் சொந்த தேசிய நலன்களை அடிப்படையாக கொண்ட கொள்கைகளை தொடர்ந்து பின்பற்றி வருகின்றன. இந்த வரி அச்சுறுத்தல், அந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்பதோடு மட்டுமல்லாமல், குறைந்தபட்சம் அவர்களுக்கு மிகவும் கடுமையான சிரமங்களை உருவாக்குகிறது.

புதிய சந்தைகள், புதிய எரிசக்தி விநியோக ஆதாரங்களைத் தேட அவர்களை கட்டாயப்படுத்துகிறது. அதிக விலைகளை செலுத்த அவர்களை கட்டாயப்படுத்துகிறது. ஆனால் இதைத் தாண்டி, ஒருவேளை இதை விட முக்கியமாக, இந்த அணுகுமுறைக்கு ஒரு தார்மீக மற்றும் அரசியல் எதிர்ப்பு உள்ளது. வெளிப்படையாகச் சொன்னால், ரஷ்யா மீது விதிக்கப்பட்ட புதிய தடைகளில் எனக்கு எந்தப் பிரச்னையும் இல்லை.

அந்தக் காலகட்டத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு ஏராளமான தடைகள் அதிபர் டிரம்பின் முதல் பதவிக் காலத்தில் விதிக்கப்பட்டன. மேற்கத்திய நாடுகள் இந்தத் தடைகளை விதித்தபோது ஏற்பட்ட சூழ்நிலையிலிருந்து நாங்கள் முடிவுகளை எடுக்கத் தொடங்கினோம். இவ்வாறு செர்ஜி லாவ்ரோவ் கூறினார். (ஐ)

## ஈரானில் சாபகார் துறைமுக மேம்பாட்டு திட்டம்: தடை விதிக்க அமெரிக்கா முடிவு



ஈரான் சாபகார் துறைமுகத்தில் இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளுக்கான பொருளாதார தடை விலக்குகளை ரத்து செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இது, இந்தியாவுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

அணு ஆயுதத்தடை ஒப்பந்தத்தை மீறியதற்காக ஈரான் மீது கடந்த 2018ம் ஆண்டு அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது. கடந்த 2024ல் சாபகார் துறைமுகத்தை இயக்குவது தொடர்பாக இந்தியா, ஈரானுடன் 10 ஆண்டுகள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் காரணமாக, ரூ.1,000 கோடி முதலீடு செய்ததுடன், ரூ.2,000 கோடிக்கு அதிகமான செலவில் துறைமுகத்தை சுற்றிலும் கட்டமைப்புகளை இந்தியா உருவாக்கியுள்ளது.

திட்டம்தொடங்கிய காலத்தில் இந்தியா–அமெரிக்கா இடையே நல்லுறவு இருந்தது. இதனால் ஈரான் துறைமுகத்தை மேம்படுத்தும் திட்டத்தை அமெரிக்கா தடுக்கவில்லை. ஈரானுக்கு எதிரான தடையில் இருந்து இந்தியாவுக்கு அமெரிக்கா முழு விலக்கு அளித்திருந்தது.

இந்த நிலையில், ஈரானுக்கு எதிரான தடை விலக்குகளை ரத்து செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது. வரும்செப்.,29ம்தேதி முதல் இந்தத் தடை விலக்குகளை ரத்து செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த முடிவினால், இந்தியாவின் முதலீடு மற்றும் துறைமுகத்துடன் தொடர்புடைய நிறுவனங்களைப் பாதிக்கும்.

சாபகார் துறைமுகமானது பாகிஸ்தானைத் தவிர்த்து ஆப்கானிஸ்தான் மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான வர்த்தக வழியை வழங்குகிறது. இது இந்தியா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் சர்வதேச வழித்தடமாகும்.

இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ஈரான் அரசை தனிமைப்படுத்தும்அதிபர்டிரம்பின்அதிகப்படியான அழுத்தக் கொள்கைக்கு இணங்கவே இந்த முடிவு எடுக்கப்பட்டது. இந்த விலக்கு நடைமுறைக்கு வந்த பிறகு, சாபகார் துறைமுகத்தை இயக்குபவர்கள் ஈரான் சுதந்திரம் மற்றும் எதிர் பரவல் சட்டத்தின் கீழ் தடைகளுக்கு உட்படுத்தப்படலாம். ஈரான் அரசு மற்றும் அதன் ராணுவ நடவடிக்கைகளைத் தக்கவைக்கும் சட்டவிரோத நிதி வலையமைப்புகளைச் சீர்குலைப்பதற்கான நடவடிக்கையாகும்,' என்று தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த முடிவு இந்தியாவின் வர்த்தக திட்டங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அபாயத்தை உண்டாக்கியுள்ளது. (ஐ)

## மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கெண்டலந்த பகுதியில், கொழும்பில் இருந்து அவிசாவளை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த பஸ்ஸ/டன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஹோமாகம பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய நபரே உயிரிழந்தவர் ஆவார்.

சடலம் பலப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்கொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## லங்காதீப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அநுராதபுரம் - பொல்பிதிகம பிரதேசத்தில் குழந்தை ஒன்று பாதுகாப்பற்ற விவசாயக் கிணற்றில் விழுந்து உயிரிழந்த சம்பவம் தொடர்பில் செய்தி சேகரித்து ஊடகத்தில் வெளியிட்டுள்ளார். இதனால் அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான ஊடகவியலாளர், குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

ஊடகவியலாளர் சிசில நந்தன கெலேகம உடல்நலக் குறைவு காரணமாக ஏற்கனவே சத்திர சிகிச்சை பெற்றவர் எனவும், ஆனாலும் தொடர்ந்து ஊடகக் கடமைகளில் ஈடுபட்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் காரணமாக மொரகொல்லாகம பிரதேச ஊடகவியலாளர் சிசில நந்தன கெலேகமவின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது எனவும் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலின்போது ஊடகவியலாளரைக் காப்பாற்றச் சென்ற அவரது மனைவியும் காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆனால், ஊடகவியலாளர் சிசில நந்தன கெலேகம தொடர்பில் கண்காணித்து சந்தேகநபருக்குத் தகவல் வழங்கி குற்றத்துக்கு உடந்தையாக இருந்தவர்களையும் கைது செய்து அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சுதந்திர ஊடக இயக்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

## கனகராயன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தங்கியிருந்த நிலையில் இந்த விபத்து இடம்பெறறுள்ளது. விபத்துடன் தொடர்புடைய கனரக வாகனத்தின் சாரதி கனகராயன்குளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சஷீந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சஷீந்திர ராஜபக்ஷவின் சார்பாகத் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான உத்தரவும் எதிர்வரும் 22 ஆம் திகதி வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல - கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எந்தவொரு விசாரணைகளிலும் அரசியல் ரீதியில் அரசாங்கம் கையிடப்பதில்லை. அதனால்தான் கடந்த காலங்களில் மறைக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில்கூட விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.

குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு என்ன செய்யலாம், நல்லிணக்க பக்கத்தில் எவ்வாறு தலையீடுகளை மேற்கொள்ளலாம் என்பது பற்றி நீதி அமைச்சு கலந்துரையாடல்களை நடத்திவருகின்றது. இவற்றுடன் தொடர்புடைய அலுவலகங்களை வலுப்படுத்துவது பற்றி அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. நாம் இனவாதத்தை தூண்டுவதில்லை. இனவாத அரசியலை நிராகரிக்கின்றோம். இனவாத நோக்கில் முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. அதனால்தான் அனைத்து இன மக்களும் இந்த அரசாங்கம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர்." என பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

# மூன்று பிள்ளைகளுக்கும் விஷம் கொடுத்து தானும் அருந்தி தாய் தற்கொலை!

உடுதும்பர, தம்பகஹபிட்டிய, ஹபுடந்துவல பகுதியில் தாய் ஒருவர் தனது மூன்று பிள்ளைகளுக்கும் விஷம் கொடுத்து தானும் அருந்திய நிலையில் உயிரிழந்துள்ளார்.

32 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் கணவர் சுமார் இரண்டு நாட்களுக்கு முன்பு இறந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

34 வயதான அவர் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 12, 10 மற்றும் 5 வயதுடைய மூன்று ஆண் பிள்ளைகளும் இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் தாய் தனது மூன்று பிள்ளைகளுக்கும் விஷம் கொடுத்து தானும் அருந்திய நிலையில் உயிரிழந்துள்ளார்.

எனினும் பிள்ளைகள் தற்போது உடுதும்பர பிராந்திய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், அவர்களின் உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த தாயாரும் மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மனைவி கொலை! கணவன் கைது!!

கம்பஹா, செப். 19

கணவன் தனது மனைவியைக் கூரிய ஆயுதத்தால் கொடூரமாகத் தாக்கிப் படுகொலை செய்துள்ளார்.

இந்தச்சம்பவம் கம்பஹா, மீரிகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரேந்தபொல பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

மீரிகம, ரேந்தபொல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவன் மற்றும் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபரான கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் காலமானார்!



நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் சென்னை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

தனது 46 வயதில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்ட ரோபோ சங்கர், சிகிச்சைக்குப் பின்னர் குணமடைந்தார்.

சில தினங்களுக்கு முன்பு காட்ஸ் ஜில்லா படப்பிடிப்பு தளத்தில் ரத்த வாந்தி எடுத்த ரோபோ சங்கர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுநீரக பாதிப்பு, உணவுக்குழாய் பாதிப்பு காரணமாக தீவிர சிகிச்சை பெற்ற அவர் உடல் நிலை மோசமான நிலையில் உயிரிழந்துள்ளார்.

மதுரையைச் சேர்ந்த சங்கர் மேடை நிகழ்ச்சிகளில் ரோபோ வேடமிட்டு டான்ஸ் ஆடுவதில் பிரபலம் ஆகியமையால் ரோபோ சங்கர் என அழைக்கப்பட்டார்.

பின்னர் விஜய் டிவி காமெடி நிகழ்ச்சிகள் மூலம் பிரபலம் ஆனார்.

சினிமாவில் மாரி, இதற்குதானே ஆசைப்பட்டாய், புலி, வாயை மூடி பேசவும் முதலான பல படங்களின் மூலம் பிரபலமான ரோபோ சங்கர் அஜித், தனுஷ், சிவகார்த்திகேயன் என பல முன்னணி நடிகர்களுடன் நடித்து உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பல நூற்றாண்டு துயரம்!....

நகைச்சுவை என்கிற பெயரில் கேலிக்கு உள்ளாக்கப்படுவதும், 'மீம்'களாக்கி அதிகம் கிண்டல் செய்யப்படுவதும் பெண்கள்தான். நகைச்சுவைப் பட்டிமன்றங்களில் 'என் மாமியார் இருக்காளே', 'என் நாத்தனார் இருக்காளே' போன்ற 'நகைச்சுவை'களைப் பட்டிமன்ற நடுவர்கள் தவிர்த்தால், வீடுகள் செழிக்கும்.

விளையாட்டாகத் தொடங்கிய இவ்வகைக் கேலிப்பேச்சுகள், குடும்ப அமைப்பின்மீதும் மனைவி, மனைவியின் குடும்பம், மாமியார்- நாத்தனார் மீதும் இனம்புரியா வெறுப்பையும் ஒவ்வாமையையும் இன்றைய இணைய உலகம் மூலம் வளர்த்துவிட்டிருக்கின்றன.

முன்பு அம்மாவையும் அத்தையையும் பயத்தோடும் பாசத்தோடும் பார்த்த சற்றே வளர்ந்த ஆண்பிள்ளைகள், தற்போது மீம் கன்டென்ட் அனுப்பி அவர்களையே கிண்டல் செய்கிறார்கள்.

குடும்பச்சூழல் ஒருபுறமிருக்க, நட்பைப் பற்றிப் பார்ப்போம். கணவனின் தோழிகளது நட்பை அவரின் மனைவி இயல்பாகப் புரிந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோலத் தானே மனைவியின் ஆண் தோழர்களையும் கணவன் எடுத்துக்கொள்ள வேண்டும்? உண்மையிலேயே அப்படித்தான் அந்த நட்பு புரிந்துகொள்ளப்படுகிறதா என்பதைச் சிந்திப்போம்.

திருமணத்துக்கு முன்புவரை ஆண், பெண் பாகுபாடில்லாமல் இயல்பாகப் பழகுகிற, பொதுச் செயல்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக்கொள்கிற பல பெண்கள் திருமணத்துக்குப் பின் தம் இயல்பு தொலைத்து அடையாளம் இழந்துவிடுகின்றனர். 'குடும்பம்னா சில விஷயங்களை எல்லாம் விட்டுக்கொடுத்துத்தான் போகணும். அதுதான் குடும்பத்துக்கு நல்லது' என்கிற சொல்லாடல் எப்போதும் பெண்களை நோக்கி மட்டுமே ஏன் சொல்லப்படுகிறது?

குடும்பம் என்பது இருவருக்குமானது எனில், குடும்பத்துக்கான விட்டுக்கொடுத்தல்களும் இருவருமே செய்யவேண்டியவை என்பதை மனத்தில் கொள்வோம்.

ஆண்தன் தோழிகளை 'ஹக்' செய்து விடைகொடுக்கலாம். பெண் தன் தோழர்களுக்குக் கைகொடுத்துக்கூட விடைகொடுத்தல் குடும்பத்துக்கு இழுக்கு.

ஆண் தன் தோழமைகளோடு சென்று வரைமுறை இல்லாமல் செலவு செய்வது கேள்விக்கு உள்ளாகாது. மாறாக, பெண் வீட்டுக்கான மளிகை சாமானில் சிலவற்றைக் கூடுதலாக வாங்குவதும், மளிகை பில் நீள்வதும் அவளைக் கேள்விக்கும் கேலிக்கும் உட்படுத்துகிறது.

'8000 ரூவாய்க்கு மளிகை பில் வந்திருக்கு' என சீரியஸாக முகத்தை வைத்துக்கொள்கிற குடும்பத் தலைவர்கள், சினிமாவுக்கு பத்து டிக்கெட் முன்பதிவு செய்யும்போது ஆகிற செலவை ஒரு பொருட்டாகவேக் கருதுவதில்லை.

பெண்கள் குடும்பத்தை குடும்பமாக மாற்ற சற்றே கடுமையாக இருக்கும்போது, அவளுக்கு 'ராட்சசி' பட்டமே மிஞ்சுகிறது.

இங்கே யாரும் மளிகை சாமானை வாங்கித் திருட்டுத்தனமாக விற்பனை செய்யப் போவதில்லை. வீட்டில் பழங்களோ காய்களோ எல்லாரும் சாப்பிடவே வாங்கப்படுகிறது. அந்தப் பழங்களை வீணாக்காமல் நறுக்கிப் பகிர்வதைக்கூட குடும்பத் தலைவியே செய்யவேண்டும் என்றில்லை. ஆனால் வேறு யாரும் அதை செய்யப்போவதுமில்லை.

ஏதோ கவனக்குறைவாலோ பணிக் களைப்பாலோ ஓரிரு பழங்களோ காய்களோ வீணாகிவிடுவது இயல்புதான். அதைப்பார்த்ததும் பொருள் வீணாவது பற்றியும் விலைவாசி பற்றியும் பேசுவது அவளை மேலும் குற்றவுணர்வுக்கு உள்ளாக்கும் என்பதை அறிந்தேதான் பலரும் அந்நேரத்தில் கேள்விகேட்கிறீர்கள். 'சாப்பிடாவிட்டால் யாருக்காவது கொடுக்கலாம் தானே ?' என்கிறீர்கள். அதையே உங்களிடமும் அவள் கேட்கலாம்தானே? சமையலறைக்கும் இதர பொருள்களுக்கும் அவள் மட்டுமேதான் பொறுப்பு என்பதன் மறைபொருள்தான் அந்த கேள்வியா? எங்களுக்கு மட்டும் ஆசையா என்ன? நீங்களும் கொஞ்சம் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள். நாங்களும் ஆறுதலாக இருக்கிறோம்.

உங்களுக்கு இருப்பதுபோலவே நட்பு, சுதந்திரம், உணர்வு, ஓய்வு எல்லாமே எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை என்பதை அனைவரும் புரிந்துகொண்டால் வாழ்வு சுகிக்கும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2025 வெளியிடப்பெற்றது.